டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

அக்ரி-டாக்டர்

மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 26.7.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 032 - Madurai | Online Edition

# காற்று மாசுபாட்டை குறைப்பதற்கான உத்திகள்

புது தில்லி, ஜூன் 25

காற்று மாசுபாட்டை அளவீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. பல்வேறு மானிட்டர்கள் மற்றும் தரவு மூலங்களிலிருந்து வரும் தரவு பிழை நிச்சயமற்ற அளவைக் கொண்டிருக்கலாம். எனவே, மாசு அளவுக்கான நாடுகள் நகரங்களின் தர வரிசை பொருத்த மானதாக இருக்காது.

மக்கள் தொகை அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட மூன்று குழுக்களில் தேசிய தூய்மையான காற்று திட்டத்தின் கீழ் உள்ள 131 நகரங்களின் தரவரிசையான தூய்மை வாயு சர்வேக்ஷன் நிகழ்ச்சியை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் நடத்துகிறது. என்.சி.ஏ.பி-யின் கீழ் காற்றின் தர மேம்பாட்டு நடவடிக்கைகளை எடுத்ததற்காக 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 47 நகரங்களின் குழுவில் தில்லி 9-வது இடத்தைப் பிடித்துள்ளது.

சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்ற அமைச்சகம் ஜனவரி 2019-ல் தேசிய தூய்மையான காற்று திட்டத்தை அறிமுகப் படுத்தியது. இது காற்று மாசுபாட்டைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல், குறைத்தல் ஆகியவற்றிற்கான நீண்டகாலத்திற்கான தேசிய அளவிலான உத்தியாகும். என்சிஏபி திட்டத்தின் கீழ், 2017-ம் ஆண்டை அடிப்படையாக வைத்து 24 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் உள்ள 131 நகரங்களில் 2024-ம் ஆண்டுக்குள் துகள்களின் செறிவை 20 முதல் 30% வரை குறைப்பது என்ற இலக்கை அடைய திட்டமிடப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, 2025-26-ம் ஆண்டுக்குள் 40% வரை குறைப்பு அல்லது தேசிய சுற்றுப்புற காற்று தரங்களை அடைய

இலக்கு திருத்தப்பட்டது. காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நகர செயல் திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஆதரவாக நகரங்களுக்கு நிதி வழங்கப்படுகிறது. அனைத்து 131 நகரங்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் என்.சி.ஏ.பி.யின் கீழ் நகர செயல் திட்டங்களை தயாரித்துள்ளன.

என்சிஏபி திட்டத்தின் கீழ், 2019-20-ம் நிதியாண்டு முதல் 2025-26 நிதியாண்டு வரை 131 நகரங்களுக்கு ரூ.19,614.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனை, மத்திய வனம், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத்துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் மாநிலங்களவையில் தெரிவித்தார்.






# மல்பெரி சாகுபடியில் பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் வெண்பட்டு உற்பத்தி குறித்த விவசாயிகள் பயிற்சி

அரியலூர், ஜுலை 25

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (அட்மா) மல்பெரி சாகுபடி மற்றும் இரு தலைமுறை பட்டுப்புழு வளர்ப்பு முறைகு றித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் அய்யப்பநாயக்கன்பேட்டை கிராமத்தில் விவசாயி ஜெயக்குமாரின் மல்பெரி சாகுபடித் திடலில் வட்டார வேளாண்மை இயக்குநர் சுப்ரமணியன் தலைமையில் நடத்தப்பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

அரியலூர் மாவட்ட பட்டு வளர்ச்சித்துறை இளநிலை உதவியாளர் ஜோதி விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தார். மல்பெரி குச்சிகள் நடவு, நீர் நிர்வாகம், களை நிர்வாகம், இலை அறுவடை செய்தல், ஆகிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார். மேலும் கொட்டகை அமைத்தல்,கொட்டகை பராமரிப்பு, இயந்திரங்கள் வாங்க அரசு வழங்கும் மானிய விபரங்கள் குறித்து விளக்கினார். உதவி ஆய்வாளர் மணிகண்டன் அவர்கள் கொட்டகை கஅமைத்தல், பட்டுப்புழு வளர்ப்பு முறைகள், பட்டுப்புழு நோயக் கட்டுப்பாட்டு முறைகள், வனம் அளிக்கும் முறை, தரமான பட்டுக்கூடுகள் உற்பத்தி, வெண்பட்டு உற்பத்தி, விற்பனை வாய்ப்புகள் ஆகிய சிறப்பம்சங்கள் குறித்து விளக்கி பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பட்டுக்கூடு உற்பத்தி குறித்த விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.




உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மகேஷ்குமார் உழவன் செயலியை பயன்படுத்தி இடுபொருட்கள் முன்பதிவு செய்யும் முறைகள் குறித்தும், ஆரோக்கியராஜ் அட்மா திட்ட செயல் பாடுகள் குறித்தும் விளக்கினர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி, இளநிலை உதவியாளர் ஜோதி,விவசாயி ஜெயகுமார் ஆகியோர் செய்திருந்தனர்.

அய்யப்பநாயக்கன்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


IFFCO
Wholly owned by Cooperatives
இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம்
IFFCO
Wholly owned by Cooperatives
பயிர்களில் ஊட்டச்சத்தின் அளவை அதிகரிக்கிறது
சுற்றுச்சூழலுக்கு உகந்தது
குருணை உரங்களை விட விலை குறைவு
உரச்செலவை குறைக்கிறது
பயிரின் தரம் மற்றும் மகசூலை அதிகரிக்கிறது
விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கிறது
IFFCO
पूर्णतः सहकारी स्वामित्व
Wholly owned by Cooperatives
NANO
DAP
Nano Di Ammonium Phosphate
LIQUID (8:16:0)
CROP NUTRITION REDEFINED
Seed Primer | Growth Enhancer | Yield Booster
NANO FERTILISER
FCO Approved
नैनो उर्वरक
Less Cost, More Profits
Suitable for all Crops
500 ml
விலை ரூ.600/-

# மணப்பாறை அருகே தொப்பம்பட்டி கிராமத்தில் செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு ஒரு நாள் பயிற்சி

திருச்சி, ஜுலை 25

திருச்சி மாவட்டம். மணப்பாறை வட்டாரம். வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை கீழ் 2024-25 ஆம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட தொப்பம்பட்டி கிராமத்தில் செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது. இதில் மணப்பாறை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மோகனா தலைமை வகித்தார்.

முன்னதாக கால்நடை மருத்துவர் டாக்டர் சிவசங்கர் பேசுகையில் செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு அவசியம் பற்றியும் ஆடுகளின் வகைகள் ஆடுகள் வளர்ப்பு பொருளாதாரம் நச்சுயிரி நோய்கள், குடற்புழு மேலாண்மை பற்றியும் கூறினார். செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பதில் ஊட்டச்சத்து பயன்பாடு, நோய்கள் வருமுன்பு காத்தல் ஆடுகளுக்கு வழங்கும் பசுந்தீவனம் அடர் தீவனம் அளிக்கும் முறைகள் மற்றும் நோய் தடுப்பூசிகள் வழங்கும் முறைகள் போன்ற விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

வேளாண்மை உதவி இயக்குனர் மோகனா முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் சிறப்பு கூறுகளை விரிவாக எடுத்துரைத்தனர். பசுந்தாள் விதை இருப்பு அதனின் விதைப்பு முறைகள், உழவன் செயலின் பயன்பாடுகள் மற்றும் தமிழ் மண் வளம் பற்றியும் மணப்பாறை வேளாண் விரிவாக மையத்தில் உள்ள உயிர் உரங்கள் பயன்பாடு அவற்றை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் விரிவாக எடுத்துரைத்தனர்.

அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்திய சீலன் செயல்பாடுகள் கண்டுணர்வு சுற்றுலா, செயல் விளக்கம், விவசாயிகள் பயிற்சி பற்றி விளக்கி கூறினார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் பிரியங்கா பேசுகையில் உயிர் உரம் அவசியம் மற்றும் பாரத பிரதமரின் விவசாயிகளின் கௌரவ நிதி திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகள் அனைவரும் தங்களது விவரங்களை அருகிலுள்ள இ-சேவை மையத்தில் புதுப்பித்தக் கொள்ள கேட்டு கொண்டு நன்றி உரை கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உழவர் நண்பர் ராமசாமி செய்திருந்தார்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 25.07.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 50 | 54 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 54 | 58 | 57 | உருளை (கோலார்) | 44 | 50 |
| 1B | கத்திரி(Nadu) | 64 | 68 | 57A | உருளை(ஊட்டி) | 90 | 95 |
| 2 | வெண்டை | 40 | 44 | 58 | மேரக்காய் | 30 | 34 |
| 3 | தக்காளி (நாடு) | 30 | 34 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 35 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 30 | 34 | 60 | கேரட் | 105 | 115 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 64 | 68 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 68 |
| 6 | புடலை | 34 | 38 | 62 | நூல்கோல் | 50 | 55 |
| 7 | பீர்க்கன் | 35 | 40 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு கோஸ் | 32 | 38 |
| 9 | பாகற்காய் | 60 | 65 | 65 | மு கோஸ்(கலர்) | 55 | 60 |
| 10 | கொத்தவரை | 40 | 44 | 66 | காளிபிளவர் | 55 | 60 |
| 11 | பூசணி | 30 | 36 | 67 | பட்டாணி | | |
| 12 | அரசாணி | 25 | 30 | 68 | பூண்டு | 190 | 264 |
| 13 | ப மிளகாய்(சம்பா) | 54 | 58 | 69 | இஞ்சி | 140 | 144 |
| 14 | ப மிளகாய்(Bullet/Nadu) | 86 | 94 | 70 | புருக்கோலின் | 210 | 220 |
| 15 | சி.வெங்காயம் | 48 | 52 | 71 | பென்னி பீன்ஸ் | 50 | 60 |
| 16 | பெ வெங்காயம் | 37 | 40 | 72 | குடமிளகாய் | 45 | 68 |
| 17 | த பயறு(வெள்ளை) | 35 | 40 | 73 | ஊட்டி அவரை | | |
| 18 | பச்சை மொச்சை | 70 | 76 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 65 | 70 | 71A | | | |
| 20 | தேங்காய் | 28 | 32 | | | | |
| 21 | மாங்காய் | 35 | 40 | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 68 | 75 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 70 | 78 | 75 | எலுமிச்சை | 60 | 70 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா | 45 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 46 | 78 | பப்பாளி | 26 | 32 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 35 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 25 | 30 | 80 | திராட்சை | 110 | 120 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 15 | 18 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 15 | 18 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 15 | 18 | 85 | அன்னாசி பழம் | 40 | 45 |
| 35 | சிறுகீரை | 15 | 18 | 86 | சீதாப்பழம் | 25 | 30 |
| 36 | பாலாக்கு | 15 | 18 | 87 | முலாம்பழம் | 35 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 15 | 18 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 30 | 32 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 30 | 35 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 48 | 52 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 46 | 52 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 30 | 34 | 95 | நாடன் | 40 | 45 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 58 | 62 |
| 46 | பீட்ருட் (உள்ளூர்) | | | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | | |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 0 | 0 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 80 | 90 |
| 52 | புளி | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 40 | 45 | 104 | நாவல் | 120 | 150 |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 34 | | | | |

# அங்கக வேளாண்மையில் நூற்புழு மேலாண்மை

பயிர்களில் பூச்சி மற்றும் தாய்க்கு இணையான சேதாரத்தை நூற்புழுக்களும் விளைமிக்கின்றன.

கோடை உழவு செய்வதன் மூலம் நாற்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம் மண்ணை மூடாக்கு போட்டு வெப்பமூட்டுதல் மூலம் கட்டுப்படுத்தலாம்.

வேப்பம் புண்ணாக்கு ஒரு எக்டருக்கு 250 கிலோ இடுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

ஊடுபயிராக துலுக்கசாமந்தி, வெங்காயம், சணப்பு, கொத்தமல்லி, பூண்டு ஆகியவற்றைப் பயிரிடுவதால் கட்டுப்படுத்தலாம்.

நாற்றங்கால் படுக்கைகளில் ஹிரீலுசி 5% தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

பேசிலோமைசிஸ் லிலாசினஸ் (1% WP) உயிர் நநூற்புழுக் கொல்லியை கீழ்கண்டவாறு பயன்படுத்துவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

விதைநேர்த்திக்கு 1 கிலோ விதைக்கு 10 கிராம் உயிர் நூற்புழு கொல்லி பயன்படுத்த வேண்டும்.

2 ஒரு லிட்டர் நீரில் 100 கிராம் உயிர் நூற்புழு கொல்லி கலந்து நாற்று நனைக்க பயன்படுத்த வேண்டும்.

3 எக்டருக்கு 5 கிலோ உயிர் நூற்புழு கொல்லியை 50 கிலோ தொழுஉரத்துடன் கலந்து பயன்படுத்த வேண்டும்.

மேற்கண்ட முறைகளை ஒருங்கிணைத்து பயன்படுத்தும்போது அங்கக வேளாண்மையில் சிறந்த நூற்புழு கட்டுப்பாடு கிடைக்கும் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அங்கக முறையில் நெல் சாகுபடி செய்வதற்கான தொழில்நுட்பங்கள்

**மண் வகை**

வண்டல் மண், மணல் கலந்த களிமண், களிமண் ஆகியவை நெற்பயிர் சாகுபடிக்கு உதந்த மண் வகைகள்.

**விதையளவு**

குறுகிய கால இரகங்களுக்கு 24-28 கிலோ விதை தேவைப்படும். செம்மை நெல் சாகுபடிக்கு 3 கிலோ விதை. மேலும் மானவாரி அல்லது புழுதி, சேற்று விதைப்புக்கு 35-40 கிலோ தேவைப்படும். நோய் எதிர்ப்புத்திறனுக்காக சூடோ மோனாஸ், கோமியம் அல்லது வசம்பு கரைசல் வைத்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

**நாற்றங்கால் தயாரித்தல்**

ஒரு ஏக்கர் நடவு செய்ய 6-8 சென்ட் நாற்றங்கால் தேவைப் படும். ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும். வாய்ப்புள்ள விவசாயிகள், நடவு வயலில் பசுந்தாள் உர விதைகளை விதைத்து, 45-60 நாட்களில் மடக்கி உழவு செய்தல் வேண்டும்.

**அடியுரம்**

- நன்கு மக்கிய தொழுவுரம் - 5-7 டன்/ஏக்கர்
- மக்கிய கோழிச்சானம் - 2 டன்/ஏக்கர்
- மண்புழு உரம் - 2 டன்/ஏக்கர்

இதில் ஏதாவது ஒன்றை கடைசி உழவின் போது நிலத்தில் இட வேண்டும். வேப்பம்புண்ணாக்கு 40-50 கிலோ அடியுரமாக இட வேண்டும்.

உயிர் உரங்களில் 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போ பாக்டீரியாவை 25 கிலோ மணல் அல்லது கம்போஸ்ட்டுடன் கலந்து நிலத்தில் தூவி விட வேண்டும்.

**நடவு**

ஒரு குத்திற்கு 2-3 நாற்றுக்களும், செம்மை நெல் சாகுபடி முறையில் ஒரு குத்திற்கு ஒரு நாற்று மட்டும் நடவு செய்தல்

வேண்டும். மேலுரம் முதல் களை எடுத்தப்பின் 25 கிலோ வேப்பம்புண்ணாக்கு அல்லது கடலைப்புண்ணாக்கை மேலுர மாக இட வேண்டும். 50-75 கிலோ மண்புழு உரத்தையும் மேலுரமாக இடலாம்.

**பஞ்சகாவ்யா தெளித்தல்**

மோட்டா இரகத்திற்கு தூர்கட்டும் பருவத்தில் ஒரு முறையும், தண்டு உருளும் சமயத்தில் ஒரு முறையும் தெளிக்க வேண்டும். சன்ன இரகத்திற்கு தண்டு உருளும் சமயத்தில் மட்டும் ஒரு முறை 3% தெளிக்க வேண்டும்.

தண்டு உருளும் சமயத்தில் பயிரில் ஒரே நேரத்தில் பூக்கள் மலர்வதற்கு புளித்த மோர்க்கரைசல் 10 சதவீதம் அல்லது 3 சதவீதம் இளநீர் கரைசலை தெளிக்க வேண்டும். மேலும் மீன் அமிலக்கரைசலை 180 மி.லி என்றளவில் 20 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கலாம்.

**பூச்சி, நோய் நிர்வாகம்**

பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்துவதற்கு பின் வருவனவற்றை நடைமுறைப்படுத்தலாம்.

- வேப்பம்புண்ணாக்கு மூட்டையை மடைவாயில் வைத்தல்
- பறவைத்தாங்கி வைத்தல்
- ஒட்டுண்ணி அட்டைக் கட்டுதல்
- இனக்கவர்ச்சி பொறி வைத்தல்
- விளக்குப்பொறி வைத்தல்
- மஞ்சள் நிறப்பூக்களை தரும் செடிகளை வயலைச்சுற்றி நடலாம்.

**நீர் நிர்வாகம்**

நெற்பயிருக்கு நீர் மறைய நீர் கட்டுதல் வேண்டும். வயலில் ஒரு அங்குல உயரத்திற்கு நீர் இருந்தால் போதுமானது.

**அறுவடை**

நெல்மணிகள் மஞ்சளாக மாறியப்பின் அறுவடை செய்-யலாம்.

இதனை, நாகப்பட்டினம், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குநர் ஆர்.சுதா தெரிவித்தார்.

# அங்கக வேளாண்மை / இயற்கை வேளாண்மை பயிற்சி

திருச்சி, ஜூலை 25

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் அங்கக வேளாண்மை/ இயற்கை வேளாண்மை பயிற்சி நடைபெற்றது. மண்ணச்சநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராணி தலைமை வகித்து திட்ட விளக்க உரை ஆற்றினார். மேலும் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் விதை இருப்பு மற்றும் விதைப்பு முறைகளை பற்றி எடுத்துக் கூறினார்.

விதை சான்று மற்றும் அங்கக சான்று உதவி இயக்குநர் நளினி, அங்கக வேளாண்மை/இயற்கை வேளாண்மை விதை சான்றளிப்பு பற்றி விரிவாக விளக்கி கூறினார். நெல்,தென்னை, மக்காசோளம் போன்றவைகளுக்கான ஒட்டுண்ணி அட்டை பயன்பாடுகள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். மேலும் விதை நேர்த்தி செய்வதன் முக்கியத்துவம், இயற்கை முறையில் களை கட்டுப்பாடு, சோலார் விளக்குப்பொறி, இனக்கவர்ச்சிப்பொறி பற்றியும் விரிவாக விளக்கிக் கூரினார். அடுத்ததாக பேசிய உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் ஆனந்த செல்வி பயிர் காப்பீடு செய்ய விரிவாக விளக்கி கூறினார். மேலும் அரசு நடத்தும் மாநில மற்றும் மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி, மாநில அளவிலான செம்மை நெல் சாகுபடி பரிசு தொகை, மாநில அளவிலான பாரம்பரிய நெல் சாகுபடி மற்றும் நெல் இரகங்கள் போட்டி பற்றி விரிவாக விளக்கி கூறினார்.

முன்னோடி விவசாயி லோகநாதன் பஞ்சகாவியா, மீன் அமில கரைசல், தேமோர் கரைசல், பூச்சி விரட்டி, பழக் கரைசல் தயாரிப்பு குறித்தும் அதை பயன்படுத்தும் முறைகள் குறித்தும் உரை ஆற்றினார். குறுவை சாகுபடி முறைகள் குறித்து வேளாண்மை அலுவலர் பரமசிவம் எடுத்துக் கூறினார். மண்ணச்ச நல்லூர் துணை வேளாண்மை அலுவலர் சின்ன பாண்டி நடப்பு பருவத்திற்கு விற்பனைக்கு தயார் நிலையில் உள்ள விதைகள், நுண்ணூட்டச் சத்து கலவைகள் மற்றும் அதன் மானியங்கள், தக்கைப்பூண்டு விதை இருப்பு குறித்து உரை ஆற்றினார்.

இயற்கை விவசாயி ஸ்டீபன் கென்னடி அங்கக வேளாண்மை குறித்தும் பாரம்பரிய நெல் ரகங்கள் குறித்தும் உரை ஆற்றினார். முன்னதாக வட்டார தொழில் நுட்ப மேலாளர் அபிராமி வரவேற்பு அளித்து உழவன் செயலியின் முக்கியத் துவம் மற்றும் பதிவேற்றம் செய்யும் முறைகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர் சிந்தியா செய்தார். இறுதியில் நன்றி உரை கூறினார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# மாடி தோட்டம் அமைக்க தோட்டக்கலைத்துறை வழங்கும் கிட்? எப்போது?



நம்முடைய அன்றாடம் தனிப்பட்ட நபருக்கு ஒரு நாளின் தேவையாக 300 கிராம் காய்கறிகள் உள்ளது. காய்கறிகளை நம்முடைய உணவில் சேர்த்துக் கொள்ளுவதால் நம் உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துகள் அனைத்தும் கிடைக்கும் என உணவியலாளர்கள் கூறுகின்றனர்.

நாம் அவ்வாறு செய்கிறோமா? இல்லை. இன்றைய நிலையில் காய்கறிகளின் விலை நாளுக்கு நாள் ஏறுமுகமாக தான் இருக்கிறது. சாரசரியாக ஒரு குடும்பத்திற்கு (4 நபர்) ஒரு வாரத்திற்கு தேவையான காய்கறி அவரவர் விருப்பத்திற்கேற்ப வாங்கிட 800 முதல் 1000 வரை செலாவகிறது, செலவுகள் கூடுதலாக இருந்தாலும் காய்கறிகளில் கண்ட கண்ட பூச்சி மருந்தின் (நஞ்சு) தாக்கமும் அதிகமாக உள்ளது. இதிலிருந்து விடுபட ஒரே வழி தான் மாடி த்தோட்டம், நகர்ப்புற மக்களுக்கு கைகொடுக்கிறது. செலவுகள் கணிசமாக குறைவதுடன் நம்முடைய தோட்டத்தில் விளைந்தது என எண்ணி உட்கொள்ளும்போது மனதில் இனம்புரியாத மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் கூடுகிறது என்றால் மிகையல்ல.

மாடித்தோட்டம் அமைக்க தேவையான ஆலோசனைகள் வழங்குவதுடன் மட்டுமல்ல அதற்குரிய இடுபொருட்களை மானிய விலையில் வழங்கிட தமிழக தோட்டக்கலைத்துறை தயாரிக்க உள்ளது. வருகிற ஆகஸ்ட் மாதம் முதல் வழங்கிட தயாராக உள்ளதாக தோட்டக்கலை துறை (HORTICULTURE DEPARTMENT) அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**மாடித்தோட்ட கிட் யில் உள்ள இடு பொருட்கள் என்னென்ன?**

1) செடி வளர்ப்பு பை - 6 எண்ணம் (அளவு 30×30×45, CM) GROW BAGS

2) தென்னை நார் கழிவு கட்டிகள் 6 கிலோ எடையுள்ள கட்டிகள் - 2 எண்ணம்

3) 6 வகையான காய்கறிகள் விதை 6 பாக்கெட்கள் (வீரிய மற்றும் ஓட்டு ரகம் மற்றும் பாரம்பரிய விதைகள்)

4) தழைசத்தை தரக்கூடிய அசோஸ்பைரில்லம் - 200 கிராம்.

5) மணிசத்தை தரக்கூடிய பாஸ்போ பாக்டீரியா - 200 கிராம்.

6) பூஞ்சான கொல்லி மருந்து (டி.விரிடி/ சூடோமானஸ்) 200 கிராம்.

7) வேப்ப எண்ணெய் மருந்து அசாடி ராக்டின் 100 மி.லி

8) செயல்முறை கையேடு 1 எண்ணம் (LEAF LETS)

**மாடித்தோட்டம் கிட் (KIT) விலை என்ன ?**

மாடித்தோட்ட கிட்டின் அடக்க விலை 900 அதை மானிய விலையில் 450க்கு வழங்கிட உள்ளது. அதிகபட்சமாக ஒரு பயனாளிக்கு 2 கிட் வரை வழங்கப்படுகின்றன.

தேவைப்படுவோர் தங்களுடைய வட்டாரத்திலுள்ள தோட்ட கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**மாடித்தோட்டம் அமைப்பதால் ஏற்படும் நன்மைகள்**

1) அலுவலக பணிகளில் உள்ள STREESயிலிருந்து விடுபட வழிவகை செய்கிறது

2) ஒரு பொழுது போக்காக (HOPPY) யாக உள்ளது.

3) தினமும் மாடித்தோட்டத்தை சுற்றி பார்ப்பதாலும் சாகுபடி பணிகளை (களை, நீர்ப்பாசன) போன்றவைகளை மேற் கொள்ளுவதால் உடலுக்கு பயிற்சியாகவும் மனதிற்கு புத்துணர்வு ஏற்படுகிறது.

4) காய்கறி வீட்டுக்கு வாங்குதல் கணிசமாக குறையும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பயிற்சி



வேளாண்மை துறையின் சார்பாக ஆத்மா திட்டத்தில் சென்ன சமுத்திரம் கிராமத்தில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பயறு வகைகளில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி தலைமை ஏற்று வேளாண்மை துறை திட்டங்களான மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் பயன்கள், தக்கை பூண்டு சனப்பை பயிரிட்டு உழுது மண்ணை வளப்படுத்துதல், ஊடுபயிராகவும், வரப்பு பயிராகவும், பயறு வகை பயிர்களை பயிர் செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்தும், தெளிவாக விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து தனபால் ஆதிபராசக்தி தோட்டக்கலை கல்லூரியின் உதவி பேராசிரியர், பயறு வகை பயிர்களின் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை எவ்வாறு கண்டறிதல் மற்றும் அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் செயல் விளக்கம் அளித்தார். நன்மை செய்யும் பூச்சிகள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகளை கண்டறிதல், பயிர் சுழற்சியின் மூலமும் தகுந்த இடைவெளி கொண்டு பயிர்களை நடுதல் மற்றும் தகுந்த ரகங்களை பயிர் செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் மற்றும் இன கவர்ச்சி பொறி, சூரிய விளக்கு பொறி ஆகவற்றை பயன்படுத்தி எவ்வாறு பூச்சிகளை கட்டுப்படுத்துதல் குறித்தும், காய் துளைப்பான் மற்றும் இலை சுருட்டு புழுவை கட்டுப்படுத்தும் காரணிகளை தெளிவாக விளக்கம் அளித்தார். தொடர்ந்து உதவி வேளாண்மை அலுவலர் டெல்லி ராஜா கிடங்கில் உள்ள இடுபொருட்கள், வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்தும் தெளிவாக விளக்கினார். தொடர்ந்து நாகராஜ் விற்பனை மற்றும் வணிகத் துறை உதவி வேளாண்மை அலுவலர் வணிகத் துறை திட்டங்கள் குறித்தும் மதிப்பு கூட்டதலின் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்தும் விளக்கினார். இறுதியாக சசிகலா வட்டார தொழில்நுட்ப மேலாளர் உழவன் செயலி குறித்தும் உழவன் செயலி மூலம் மண்வளத்தை எவ்வாறு தெரிந்து கொள்வது குறித்தும் விளக்கம் அளித்தார். தொடர்ந்து நர்மதா உதவி தொழில் நுட்ப மேலாளர் நன்றியை தெரிவித்து நிகழ்ச்சியை நிறைவு செய்தார். இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கு பெற்று பயனடைந்தனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நுண்ணுயிர் பாசன பயிற்சி



திருச்சி, ஜூலை 25

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரம் வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் மண்ணச்சநல்லூர் நுண்ணுயிர் பாசனம் குறித்து பயிற்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வட்டார தொழில் நுட்ப மேலாளர் அபிராமி வரவேற்புரை ஆற்றினார். மண்ணச்சநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தலைமை வகித்து திட்ட விளக்க உரை ஆற்றினார்.






மேலும் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் விதை இருப்பு மற்றும் விதைப்பு முறைகளை பற்றி எடுத்துக் கூறினார். நுண்ணீர் பாசன நிறுவன மேலாளர் சங்கர் நுண்ணீர் பாசன முக்கியத்துவம், பராமரிப்பு,நீர் வழி உரம் மேலாண்மை செய்தல்,நுண்ணீர் பாசனம் வகைகள்,அரசு மானிய விபரங்கள்,சொட்டு நீர் பாசனத்தில் பயன்பெறும் பயிர் வகைகள் மற்றும் நுண்ணீர் பாசனம் அமைக்க தேவைப்படும் ஆவணங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். குறுவை சாகுபடி முறைகள் குறித்தும். நடப்பு பருவத்திற்கு விற்பனைக்கு தயார் நிலையில் உள்ள விதைகள், நுண்ணூட்டச் சத்து கலவைகள் மற்றும் தக்கைபூண்டு விதை இருப்பு மானியங்கள் குறித்து வேளாண்மை அலுவலர் உரை ஆற்றினார். இறுதியில் உதவி தொழில் நுட்ப மேலாளர் சிந்தியா நன்றி உரை கூறினார்.

# பசுமைக்குடில் வெள்ளரி சாகுபடியில் தோட்டக்கலைக் கல்லூரி மாணவர்களின் அனுபவம்!

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பெரியகுளத்தில் நடப்பாண்டு இறுதி ஆண்டு மாணவர்களுக்கு அனுபவப் பயிற்சி கல்வி திட்டத்தின் கீழ் காய்கறி அறிவியல் துறையில் பேராசிரியர் முனைவர் க.சுந்தரயா தலைமையில் மாணவ, மாணவிகளுக்கு பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறையில் அதிக மதிப்புள்ள தோட்டக் கலை பயிர்களை பயிரிடுதல் என்ற கல்வி முறையின் கீழ் பசுமைக்குடில் வெள்ளரி சுமார் அரை ஏக்கர் நில அளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கல்வியில் திறந்த சாகுபடியை விட பாதுகாக்கப்பட்ட சாகுபடி அதிக உற்பத்தித் திறனையும் சிறந்த தரத்தையும் உறுதி செய்கிறது என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் பசுமைக்குடிலில் தப்பவெப்பநிலை, சூரிய ஒளி, ஈரப்பதம் ஆகியவை முறையே கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் மூலம் பசுமைக்குடிலில் வெள்ளரி சாகுபடியில் அதிக மகசூல் பெற வழிவகை செய்கிறது. இதில் மாணவர்கள் சுமார் 22 பேர் பங்கேற்று அனுபவ பயிற்சி கல்வி மேற்கொண்டு வருகின்றனர்.

வெள்ளரியின் மருத்துவ பயன்பாடுகள் குறித்து பேராசிரியர் முனைவர் க. சுந்தரயா கூறியதாவது,

● பசுமைக்குடில் வெள்ளரிக்காய் (குக்குமிஸ் சடைவஸ் எல்.) என்பது உலகளவில் பயிரிடப்படும் மிகவும் பொதுவான மற்றும் முக்கியமான பயிராகும்.

● வெள்ளரியின் இளம் பிஞ்சு சாலட் செய்வதற்கும் மற்றும் முதிர்ச்சியடைந்த வெள்ளரியானது காய்கறியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

● இந்தியாவில் பழங்காலத்திலிருந்தே இது உணவாக அல்லது மருந்தாக பயன்பட்டு வருகிறது.

● வெள்ளரிக்காயில் 96% தண்ணீர் உள்ளது, இது கோடை காலத்தில் உடலில் நீர்ச்சத்து குறையாமல் பாதுகாக்கிறது, உடல் ஆரோக்கியத்திற்கும் மட்டுமல்லாது சரும ஆரோக்கியத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது.

● வெள்ளரிக்காயில் மாலிப்டினம், வைட்டமின் மற்றும் பொட்டாசியம் ஆகியவற்றின் சிறந்த மூலமாக விளங்குகிறது. இதனால் தோல் பிரச்சனைகள், சிறுநீரகம், இதய பிரச்சனை களை குணப்படுத்தவும் உதவுகிறது.

● இது தம்னிகளில் உள்ள அழுத்தத்தையும் குறைத்து நீரேற்றமாக வைத்திருக்கிறது.

● வெள்ளரிக்காயில் இருக்கும் நார்ச்சத்து மலச்சிக்கலை தடுக்க உதவுகிறது.

மேலும் வெள்ளரி சாகுபடி குறித்து பேராசிரியர் கூறியதாவது,

● வெள்ளரியானது மெல்லிய கொடி இனத்தைச் சார்ந்ததாகும்.

● இதன் இலைகள் பெரியதாகவும், இலைகளில் வெள்ளை ஊசி போன்ற முட்கள் பரவியும், மலர்கள் மஞ்சள் நிறத்திலும் காணப்படும்.

● வெள்ளரி சாகுபடிக்கு நல்ல வடிகால் வசதியுடன் கூடிய அதிக கரிமப் பொருட்களைக் கொண்ட மணல் கலந்த களிமண் மண் மற்றும் 2dS/m-க்கும் குறைவான மின் கடத்துத்திறன் மற்றும் pH வரம்பு 6.5-7.5 வரை ஏற்றதாகக் கருதப்படுகிறது.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# சாகரிகா (கடற்பாசி திரவ உரம்)

சாகரிகா என்பது கடலில் இருந்து அறுவடைசெய்யப்பட்ட சிவப்பு மற்றும் பழுப்பு நிற பாசிகளை கொண்டு தயாரிக்கப்பட்ட திரவ உரமாகும். இதில் 14 – 18 % சாம்பல் சத்துகள், பயிர் வளர்ச்சிக்கு தேவையான அமினோஅமிலங்கள், வளர்ச்சி ஊக்கிகள், பேரூட்டச் சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் உள்ளது. சாகரிகா திரவ உரத்தை இலை வழி தெளிப்பு மூலமாகவோ அல்லது சொட்டு நீர்ப்பாசனம் மூலமாகவோ பயன்படுத்தலாம். சாகரிகா பயிரை விரைவில் வளர்ச்சியடைய செய்வதோடு, பூக்கள் மற்றும் காய்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

**பயிரும் பரிந்துரையும்**

| **பயிர் வகைகள்** | **முதல் தெளிப்பு** | **இரண்டாம் தெளிப்பு** | **மூன்றாம் தெளிப்பு** | **நான்காம் தெளிப்பு** |
|---|---|---|---|---|
| நெல் | நடவு செய்த 25வது நாள் | நடவு செய்த 40வது நாள் | நடவு செய்த 60வது நாள் | |
| பயிறு வகைகள் (உளுந்து/ பச்சைபயிறு) | விதைத்த 20வது நாள் | பூ பூக்கும் முன் | பூ பூத்த பின்னர் | |
| கரும்பு | பயிர் முளைத்த 45வது நாள் | பயிர் முளைத்த 90வது நாள் | பயிர் முளைத்த 125வது நாள் | |
| வாழை | முதல் மூன்று இலை (அ) 3வது மாதம் | 5வது மாதம் | பூ பூக்கும் தருணம் | இளங்காய் பருவம் |
| காய்கறிகள் | விதைத்த 20வது நாள் | முதல் தெளிப்பு தெளித்த 20 நாட்களில் | இரண்டாம் தெளிப்பு தெளித்த 20 நாட்களில் | |
| இதர பயிர்கள் | பழம் மற்றும் பூச்செடிகளுக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சாகரிகா கரைசலை தெளிக்கலாம். | | | |

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

**பயன்படுத்தும்முறைகள்**

இலைவழி தெளிப்பு

25 மி. லி. சாகரிகாவை 10 லிட்டர் நீரில் கலந்து பயிர் முழுவதும் நனையுமாறு தெளிக்க வேண்டும் (ஒரு ஏக்கருக்கு 250 – 500 மி. லி.சாகரிகா பயன்படுத்தவும்).

மேலும் காலை மற்றும் மாலை நேரங்களில் தெளிப்பது பயிர்களுக்கு உகந்தது.

- ADVT.




**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# விதைதேர்வும் உயர் விளைச்சலும் - ஓர் பார்வை

விவசாய பெருமக்கள் விதைத் தேர்வில் அதிகஅக்கறை எடுத்து பயிரிட்டால் அதிக மகசூல் எடுத்துவிடலாம். ஒரு நிலத்தில் விளையும் விதையைக் கொண்டு அதே நிலத்தில் வருடந் தோறும் பயிரிடுவதனால் விதையின் வீரியம் நாளடைவில் குறைந்து பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் இழப்பு ஏற்படும். பயிர் ரகங்கள் பாதுகாத்தல் மற்றும் விவசாயிகளின் உரிமைகள் பாதுகாப்புசட்டம் 2001ன்படி ஒரு விவசாயி தனது நிலத்திலேயே விளைந்த வித்தையே விதைக்கலாம் என்ற உரிமையை வழங்குகிறது. எனவே,ஒரு விவசாயி விரும்பினால் தனது நிலத்திலேயே விளைந்த பயிர்களிலிருந்து மணிகள் நன்கு முதிர்ந்து திரண்டு சீராக முற்றிய விதைகளை விதைக்கென அறுவடை செய்ய வேண்டும்.

நன்கு பெருத்து திரண்ட வித்தில் பயிர் முளைத்து செழிப்பாக வளர்வதற்கு தேவையான உணவு முளைக்கருவில் இருக்கும். அவ்விதம் பெருத்து திரண்ட வித்தை பெறுவதற்கு விவசாயிகள் பயிர் வளர்ச்சியின் ஆரம்ப காலத்திலிருந்து அடியுரமாகவோ, மேலுரமாகவோ இட வேண்டிய சத்துக்களை சரி சமவிகித அடிப்படையில் இடுதல் அவசியமாகும். இவ்விதம் விதைக் கென்று பயிரிடப்பட்ட வித்துக்களை ஒரு வருடத்திற்கு மேற்படாமல் சேகரித்து வைப்பது சிறந்ததாகும்.

ஒரு வருடத்திற்கு மேல் சேகரித்து வைத்து விதைக்கும் பட்சத்தில் அதன் முளைப்புத்திறன் பாதிக்கப்படும். அவ்விதம் விதைக்கென அறுவடை செய்யப்பட்ட வித்துக்களை பத்திரமாக பாதுகாத்து வைக்க வேண்டும். ‘காய்ந்த வித்திற்கு பழுதில்லை‘ ஆதலால் வித்துக்களை வெயிலில் சீராக உலர்த்தி, வித்துக் களின் ஈரத்தன்மை நெல்லிற்கு 13 சதவீதத்திற்குள் ளும், உளுந்து, பாசிபயறு, நிலக்கடலை,எள், தட்டைப்பயறு போன்ற வற்றிற்கு 9 சதவீதத்திற்குள்ளும், பருத்திக்கு 10ச தவீதத்திற் குள்ளும், மக்காச்சோளம், கம்பு, ராகி, தினை போன்றவற்றிற்கு 12 சதவீதத்திற்குள்ளும் இருக்குமாறு காய வைத்து சேமிக்க வேண்டும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

சேமிக்கும் போது விதை நன்றாக காயாமல் இருந்தால் அதிலுள்ள முளைக்கரு உஷ்ணத்தினால் புழுங்கிஅல்லது முளைத்து நாசமடையும். மேலும், இவ்வாறு விவசாயிகள் தனது நிலத்தில் விளைவிக்கப்பட்ட பொறுக்கி எடுத்த விதைகளை ஒரே நிலத்தில் வருடந்தோறும் திரும்ப திரும்ப பயிரிட்டு வந்தால் அதன் வீரியம் நாளடைவில் குறைவுபடும் என அறிதல் அவசியம்.

ஆதலால் விவசாய பெருமக்கள் வித்தை மாற்றுவது நலமாகும். அதற்கு அவர்கள் அருகில் பயிரிடும் வேறு ஒரு விவசாயிடம் விதையை வாங்கி பயிரிடுவது நன்மை பயக்கும்.

லேசான மணல் கலந்த நிலத்தில் விளைந்த வித்தை களிமண் பாங்கான நிலத்தில் விளைவித்தால் உயர் மகசூல் தரும் வாய்ப்பு அதிகம். விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையால் பல்வேறு பயிர்களுக்கு அதன் தரத்தின் அடிப்படையில், அடிப்படை விதை, சான்றளிக்கப்பட்ட விதை என சான்றளிக் கப்பட்டு விவசாய பெருமக்களுக்கு தரமான விதைகள் கிடைக்க உறுதி செய்து செயல்பட்டு வருகிறது. அடிப்படை விதைக்கு வெள்ளை நிற அட்டையும், சான்றளிக்கப்பட்ட விதைக்கு நீல நிற அட்டையும், அதற்குரிய மூட்டைகளில் இணைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. இவ்விதம் இணைக்கப்படும் அட்டைகளில் உற்பத்தி செய்யப்பட்ட விதை எந்த தன்மையுள்ள மண்ணில் விளைந்தது என்ற குறிப்புடன் இருந்தால் உபயோகமாக இருக்கும். அதன் மூலம் செம்மண், மணல் சார்ந்த நிலத்தில் விளைந்த வித்தை களிமண் நிலத்திலும், களி மண்ணில் விளைந்த வித்தை செம்மண் நிலத்திலும் விளைவித்து உயர் மகசூல் பெற வழி வகை செய்யலாம்.

ஆதலால்,விதை வித்துக்களை விவசாயிகள் அதை உற்பத்தி செய்யும் பொழுதும், சேமித்து பயன்படுத்தும் போதும், அதே விதைகளை பயன்படுத்தாமல் வித்துக்களை மாற்றி பயிரிடும் போதும் கவனமாக முடிவுகளை எடுத்து பயிர் செய்து உயர் மகசூல் பெற திருநெல்வேலி விதைப்பரிசோதனை அலுவலர் ஞா.ஆனந்திராதிகா மற்றும் வேளாண்மை அலுவலர் ம.மகேஸ்வரன் கேட்டுக் கொள்கிறார்கள்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தென்னைக்கு ஏற்ற பசுந்தழை உரம் கிளைரிசிடியா

நங்கவள்ளி வட்டாரத்தில் அதிகபடியான தென்னை சாகுபடி செய்வதால், விவசாயிகளுக்கு உரத்தை கட்டுப்படுத்த நங்கவள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் து.ரமேஷ் தென்னைக்கு ஏற்ற பசுந்தழை உரம் பற்றி எடுத்துக்கூறினார்.

● தென்னந்தோப்புகளின் எல்லைகளில் வளர்க்கப்படும் கிளைரிசிடியா 3 ஆண்டு வளர்ச்சிக்குப் பிறகு தென்னை மரங்களுக்கு உரமிடுவதற்குப் போதுமான பசுந்தழை இலைகளைத் அளிக்கின்றன.

● இது அனைத்து வகையான மண்ணிலும், மலை சரிவுகளிலும், மணல் நிறைந்த கடற்கரை சமவெளிகளிலும், தாழ்வான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட களிமண் பகுதிகளிலும் நன்றாக வளரும்.




● இது பசுந்தழை உரம் கொடுப்பதோடு வேலியாகவும் பயன்படுகிறது.

● கிளைரிசிடியா இலைகள் மிக விரைவில் சிதைந்து மண்ணில் உரமாக எளிதில் சேரும் பண்புடையது

● இதன் இலைகளில் அதிக அளவு நைட்ரஜன் உள்ளது. 700 மீட்டர் நீளமுள்ள கிளைரிசிடியாவினை வளர்க்கும்போது ஆண்டு ஒன்றுக்கு எக்டருக்கு 300 கிலோ தழைச்சத்து கிடைக்கிறது.

● மண்ணில் புதைக்கப்பட்ட கிளைரிசிடியா 17 நாட்களில் மக்கி அதன் அளவில் பாதியாகிவிடும். பத்து நாட்களில் மக்கி தழைச்சத்து உரமாக கிடைக்கிறது. தழைச்சத்து, பொட்டாசியம் மற்றும் கால்சியம் ஆகிய சத்துக்கள் மிக விரைவில் அதாவது 28வது மற்றும் 60வது நாட்களில் முறையே வெளிப்படு கின்றன.

● கிளைரிசிடியா மிக விரைவில் மண்ணில் மக்குவதால் மண் வளம் அதிகரித்து நன்மை செய்யும் நுண்ணுயிரிகள் அதிகளவில் பெருக்கமடைந்து மண்ணில் வாழும் நோய்க் காரணிகளைக் கட்டுப்படுத்துகின்றது தென்னையில் வாடல் நோயை கட்டுப்படுத்துகின்றது.

● மேலும், கால்சியம். மெக்னீசியம் போன்ற சத்துக்கள் கிளைரிசிடியாவிலிருந்து வெளிப்பட்டு அமிலத்தன்மை உள்ள மண் வகைகளில் அலுமினியத்தின் நச்சுத் தன்மையைக் குறைக்கின்றது.

**கிளைரிசிடியாவில் உள்ள சத்துக்கள்**

| | |
|---|---|
| கச்சா புரதச்சத்து | – 18–30 சதவிகிதம் |
| தழைச்சத்து | – 2.4 சதவிகிதம் |
| மணிச்சத்து | – 0.1 சதவிகிதம் |
| சாம்பல் சத்து | – 1.8 சதவிகிதம் |
| நார்ச்சத்து | – 18.7 சதவிகிதம் |

கால்சியம் மற்றும் மெக்னீசியம் – சிறிதளவு.

## பல்லவராயன்பட்டி கிராமத்தில் நுண்ணீர் பாசனம் பற்றிய விவசாயிகள் பயிற்சி



புதுக்கோட்டை, ஜூலை 25

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்கத் திட்டத்தின் கீழ் பல்லவராயன்பட்டி கிராமத்தில் நுண்ணீர் பாசனம் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை துணை இயக்குநர் (நுண்ணீர் பாசனம்) ஆதிசாமி, துணை வேளாண்மை அலுவலர் வெற்றிச் செல்வன்,பிரிமியர் நுண்ணீர் பாசன கம்பெனி அலுவலர் முத்துக்குமார் மற்றும் முருகேசன், சரவணன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் திருமதி. சங்கீதா அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். வேளாண்மை துணை இயக்குநர் (நுண்ணீர் பாசனம்) ஆதிசாமி, நுண்ணீர் பாசனத்தின் அவசியம் பற்றியும் ஆரோக்கிய உணவுகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் வெற்றிச்செல்வன் பேசுகையில் வேளாண்துறை மூலம் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்கள் பற்றியும் மண் மாதிரி எடுப்பதன் அவசியம் பற்றியும் எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் காளிதாஸ் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி கூறினார்.




மேலும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் மற்றும் அதன் செயல்பாடுகள் திட்டத்தில் வழங்கப்படும் இடுபொருட்கள் தரிசு நில தொகுப்பு மூலம் பாசன வசதி அமைத்தல் பற்றி எடுத்துக் கூறினார். பிரிமியர் நுண்ணீர் பாசன கம்பெனி அலுவலர் முத்துக்குமார் நுண்ணீர் பாசனம் அமைப்பதன் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

பிரிமியர் நுண்ணீர் பாசன கம்பெனி அலுவலர் முருகேசன் நுண்ணீர் பாசனத்தினை பராமரிப்பது பற்றி கூறினார். பயிற்சியின் இறுதியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் சுப்பிர மணியன் நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் காளிதாஸ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளின் சந்தேகங்களுக்கு நேரடியாக விளக்கம் அளிக்கப்பட்டது.